# துணை இயக்குநர், தொழிலகப்பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அலுவலகம், கோவை

அனுப்புநர்
சீ.ஸ்ரீதரன், எம்.இ.,
துணை இயக்குநர்,
தொழிலகப்பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்-II,
கோவை

பெறுநர்
உரிமையாளர்/ மேலாளர்

---

ஐயா/ அம்மையீர்

பொருள் : பணியிடத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் துன்புறுத்தல் (தடுத்தல், தடை செய்தல் மற்றும் தீர்வு காணுதல்) சட்டம், 2013- தொழிற்சாலைகளில் உள்ளக புகார்குழு அமைக்க அறிவுறுத்தப்பட்டது- உள்ளக புகார்குழு அமைத்து விவரங்களை வலைதளத்தில் பதிவேற்றம் செய்ய அறிவுறுத்துவது- தொடர்பாக

பார்வை : 1) சென்னை,தொழிலகப்பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களது குறிப்பாணை எண் G2/23783/2024. நாள். 19.01.2026

2) சென்னை,தொழிலகப்பாதுகாப்பு மற்றும் சுகாதாரஇயக்குநர் அவர்களது குறிப்பாணை எண் G2/23783/2024-2. நாள். 04.02.2026

3) Government Order No.23 Labour Welfare and Skill Development (H2) Department Dated 20.02.2026

--------------

Tamil Nadu மாநிலத்தில், பெண்கள் பணியாற்றும் மற்றும் 10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரியும் அனைத்து பணியிடங்களிலும், Sexual Harassment of Women at Workplace (Prevention, Prohibition and Redressal) Act, 2013 படி பெண்களுக்கு எதிரான பாலியல் தொல்லைகளைத் தடுக்கவும் மற்றும் அதற்கான புகார்களை பரிசீலித்து தீர்வு காணும் நோக்கிலும் உள்ளக புகார் குழு (Internal Complaints Committee – ICC) அமைப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பெண்கள் பணியாற்றும் மற்றும் 10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் உள்ள அனைத்து தொழிற்சாலைகளிலும் POSH சட்ட விதிகளின்படி உள்ளக புகார் குழு (Internal Complaints Committee – ICC) அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

மேலும், இக்குழுவானது பின்வருமாறு உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்:

| | | |
|---|---|---|
| 1. | Presiding Officer | நிறுவனத்தின் மூத்த பெண் பணியாளர் |
| 2. | இரண்டு உள்புற உறுப்பினர்கள் | நிறுவனத்தின் பணியாளர்களில் இருந்து தேர்வு செய்யப்படுவர். |
| 3. | ஒரு வெளிப்புற உறுப்பினர் | பெண்கள் நலனில் ஈடுபட்டுள்ள அரசு சாரா நிறுவனம் (NGO) அல்லது பெண்கள் நலனுக்காக செயல்படும் அமைப்பிலிருந்து அல்லது பாலியல் தொல்லை தொடர்பான விஷயங்களில் நன்கு அறிவும் அனுபவமும் கொண்ட தனிநபர் நியமிக்கப்படுவர். |

*(*மேற்கண்ட உறுப்பினர்களில் குறைந்தது பாதி பெண்களாக இருக்க வேண்டும்.*)

மேலும், உள்ளக புகார் குழு (Internal Complaints Committee – ICC) அமைக்கப்பட்ட விவரத்தினை மாவட்ட சமூகநலத்துறை அலுவலகத்திற்கு (முகவரி: மாவட்ட சமூக நல அலுவலர், மாவட்ட சமூகநலத்துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோவை) அனுப்பிவைத்து, அதன் நகலினை இவ்வலுவலகத்திற்கும் அனுப்பிவைக்குமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், மேற்கண்டவாறு உள்ளக புகார் குழு (Internal Complaints Committee – ICC) அமைக்கப்பட்ட விவரங்களை கட்டாயமாக கீழ்க்கண்ட இணைய தளங்களில் பதிவு செய்யப்பட வேண்டும்:

- Tamil Nadu POSH Portal (www.tnswd-poshicc.tn.gov.in)
- SHe-Box Portal (shebox.wcd.gov.in)

இதுதொடர்பாக, முன்பே ஆலோசனை (Advisory) அடிப்படையில் அனைத்து தொழிற்சாலை நிர்வாகங்களுக்கும் தங்களது தொழிற்சாலைகளில் உள்ளக புகார் குழுவை (Internal Complaints Committee – ICC) அமைக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் பல தொழிற்சாலைகளில் நாளது தேதிவரை உள்ளக புகார் குழுவானது (Internal Complaints Committee – ICC) அமைக்கப்படாமல் உள்ளது

தற்போது, பார்வை-3-ல் காணும் Government Order No.23 Labour Welfare and Skill Development (H2) Department Dated 20.02.2026 -ன் அடிப்படையில், மேற்கண்ட சட்டம் பிரிவு- 25 -ன் படி, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை அலுவலர்களை இச்சட்டத்தின் கீழ் ஆய்வாளர்களாக நியமித்து அதிகாரம் வழங்கியுள்ளது.

எனவே, பெண்கள் பணியாற்றும் மற்றும் 10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் உள்ள அனைத்து தொழிற்சாலை நிர்வாகங்களும், உடனடியாக சட்ட விதிகளின்படி உள்ளக புகார் குழு (Internal Complaints Committee – ICC) அமைத்து, இணைய தளங்களில் பதிவு செய்து அதனைஉறுதி செய்யும் உறுதிமொழி படிவம் (Annexure-I)-யை இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி, உள்ளக புகார் குழுவை (Internal Complaints Committee – ICC) அமைக்காத நிலையில், POSH Act, 2013 விதிகளின்படி, சம்பந்தப்பட்ட தொழிற்சாலை உரிமையாளர் மீது ரூ.50,000/- வரை அபராதம் விதிக்கப்படும் என்பதையும், தொடர்ந்து சட்ட விதிகளை மீறி செயல்படும் தொழிற்சாலை உரிமையாளர் மீது கூடுதல் சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு- உறுதிமொழி படிவம் (Annexure-I)

Rajendran 17/03/2026

(for) துணை இயக்குநர்,

தொழிலகப்பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்-II,

கோவை.

# Annexure-I

## உறுதிமொழி படிவம்

- எங்களது தொழிற்சாலைகளிலும் POSH சட்ட விதிகளின்படி உள்ளக புகார் குழு (Internal Complaints Committee – ICC) அமைக்கப்பட்டுள்ளது என்றும்,
- உள்ளக புகார் குழு (Internal Complaints Committee – ICC) அமைக்கப்பட்ட விவரம் மாவட்ட சமூகநலத்துறை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுவிட்டது என்றும்,
- உள்ளக புகார் குழு (Internal Complaints Committee – ICC) அமைக்கப்பட்ட விவரம் Tamil Nadu POSH Portal (www.tnswd-poshicc.tn.gov.in) மற்றும் SHe-Box Portal (shebox.wcd.gov.in) ஆகிய வலைதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் உறுதிஅளிக்கிறேன்.

தொழிற்சாலை உரிமையாளர் கையொப்பம்
முத்திரையுடன்